கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.

**MCOP No : 222/2022** **நாள் 11.08.2025**

எதிர்மனுதாரர் தரப்பில் ஓட்டுநரான கந்தசாமி த/பெ.சின்னச்சாமி அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.1 ஆனவரை முதல் விசாரணை செய்யப்படுகிறார் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் M.சாரதிதேவி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தாலுகா | |
| த–பெ | சின்னச்சாமி | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | | வயது | 50 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பாத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்குவிசாரணை மனுதாரர் தரப்பில்**

30.08.2022ம் தேதி நடந்த வாகன விபத்திற்கு எனக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். அதுபோல் குற்ற இறுதிஅறிக்கையும் எனக்கு எதிராக தான் தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். நான் என்னுடய முதல் விசாரணையில் சொன்னமாதிரி விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு நா்ன தான் முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. என் மீது தவறு உள்ளதால் தான் எனக்கு எதிராக குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனமானது இழப்பீடு தொகையை செலுத்த இருந்துகொள்ள வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது தவறு எதுவும்இல்லை என்று சொல்லி நான் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளிரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**Name of the Interpreter : Not necessary** **சாட்சியின் கையொப்பம்**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 11th day of August2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஶ்ரீவில்லிபுத்தூர்.